**<u>நீதித்துறை நடுவர்  நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.</u>**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 04 ஆம் நாள்)

**<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.411/2022</u>**

**<u>CNR.No.TNTI17-000600-2022</u>**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், உடுமலை காவல் நிலையக் குற்ற எண். 455/2019 |
| //எதிர்// | | |
| எதிரி | – | சுகந்தகுமார் (35/2019),<br>த/பெ. நந்தகுமார்,<br>4/55, பார்த்தசாரதி சாலை,<br>நன்மங்கலம், பழைய பல்லாவரம்,<br>காஞ்சிபுரம் மாவட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 287 இ.த.ச.–வின் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 287 இ.த.ச.–வின் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டான இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 287–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| புகார் நாள் | – | 29.08.2019 |
| கைது செய்யப்பட்ட நாள் | – | 15.10.2019 |
| பிணையில் சென்ற நாள் | – | 15.10.2019 ஆம் தேதியன்று காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| கோப்பு நாள் | – | 12.04.2022 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 11.05.2023 |
| விசாரணை முடிக்கப்பட்ட | – | 09.03.2026 |

| | | |
|---|---|---|
| நாள் | | |
| தீர்ப்புரை நாள் | – | 18.03.2026 |

இவ்வழக்கானது கடந்த 12.04.2022ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.J.ஜூடு பிரபு, MCA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்தளிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் குற்ற எண்.455/2019–ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :

1) இவ்வழக்கின் சாட்சி–2 ஆன அமராவதி என்பவர் உடுமலைப்பேட்டை காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விஹாசினி காயர்ஸ் பதிவு எண் TN 28 A 0062391ல் என்ற மட்டை மில்லுக்கு கூலி வேலைக்கு சென்று வந்துள்ளதாகவும், கடந்த 28.08.2019ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு சாட்சி–2 மேற்படி மில்லில் மட்டைகளை எடுத்து மெஷினில் போட்டுக் கொண்டிருந்தபோது அவரது இடது கை எதிர்பாராதவிதமாக மிஷினில் சிக்கி கொடுங்காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி மில்லின் ஓனர் சுகந்தகுமார் என்பவர் மில்லில் வேலை செய்பவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் ஏதும் செய்யாமல் அசட்டையாக செயல்பட்ட குற்றத்திற்காக, எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 287 – ன்

படி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 207–பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்னர் குற்றத்திற்கான போதுமான முகாந்தரம் இருந்ததாக இந்நீதிமன்றத்திற்கு தோன்றியதால் எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 287–ன் கீழ் குற்றச்சாட்டின் சாரம்சம் குறித்து குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 251–ன் கீழ் தெளிவாக தமிழில் படித்துக்காட்டி விளக்கம் கேட்டபோது இவ்வழக்கின் எதிரி தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்து தான் குற்றவாளி அல்ல என தெரிவித்தார். மேலும் தன் மீது போடப்பட்ட வழக்கை விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய அரசு தரப்பில் வழிவகை செய்யப்பட்டது.

3) எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 11 சாட்சிகள் பட்டியலிடப்பட்டு 06 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

4) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1. ஜெயராஜ் என்பவர் கடந்த 28.8.2019 ம் தேதி ஆண்டிப்பட்டியில் வேலையில் இருந்தபோது அ.சா.1ன் தங்கை அமராவதி உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் விகாசினி காயர்ஸ் மட்டை மில்லுக்கு வேலைக்கு சென்றபோது அன்று காலை 11.00 மணிக்கு வேலை செய்யும் கற்பகம் என்பவர் அ.சா.1க்கு போன் செய்து மட்டை அறைக்கும் மிஷினில் அ.சா.1ன் தங்கையின் கை சிக்கி இடது கை கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னதன் பேரில் உடுமலை அரசு

மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு முடியாது என்று சொன்னதால் கோவை கங்கா மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்துள்ளார்.

5) மேற்படி அ.சா.1ன் தங்கைக்கு இடது கை முழுவதும் அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிட்டார்கள். மேற்படி விபத்து ஏற்பட்டபோது மிஷினை நிறுத்துவதற்கான சுவிட் தூரமாக இருந்ததால் வேறு ஒரு நபர் சென்று Stop பட்டனை நிறுத்தும் வரை மேற்படி மிஷினில் தங்கை கை சேதாரம் ஏற்பட்டது என்றும், மேற்படி மில் உரிமையாளர் மில்லில் உரிய பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் செய்யாததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார்கள். இது சம்பந்தமாக உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். புகாரில் உள்ள கையொப்பம் அ.சா.1 உடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) அ.சா.2. அமராவதி என்பவர் உடுமலை பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விகாஷ்னி காயர்ஸ் என்ற மட்டை மில்லில் கடந்த 28.8.2019 ஆம் தேதியன்று வேலைக்கு சென்று பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு மிஷினில் மட்டையை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது மிஷினுக்குள் கை சிக்கிக்கொண்டதால் அய்யோ, அம்மா என்று கத்தியுள்ளார். பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து மிஷினை நிறுத்திவிட்டு கையை வெளியே எடுத்துள்ளார்கள். மிஷினுக்கு பக்கத்தில் மிஷினை நிறுத்துவற்கு சுவிட் எதுவும் இல்லை என்றும், கையை வெளியே எடுத்த உடன் மயக்கமாகி விட்டதாகவும், உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்ததாகவும், பின்பு மேல் சிகிச்சைக்கு கோவை கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாகவும் கூறியுள்ளார்.

7) மேற்படி சிகிச்சையின்போது அ.சா.2ன் பகுதி இடது கையை அறுவை சிகிச்சை மூலம் அகற்றியுள்ளார்கள். மேற்படி விபத்திற்கான காரணம் மிஷினில் கை வைத்ததும் அதை நிறுத்துவதற்கு பக்கத்தில் சுவிட் இல்லாததால் மிஷினை

நிறுத்த முடியவில்லை என்றும் எனவே மேற்படி மில்லின் உரிமையாளர் வேலை செய்வதற்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு எதுவும் செய்யவில்லை, அதனால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார்.

8) அ.சா.3. முருகன் என்பவர் உடுமலை பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விகாஷ்னி காயர்ஸ் என்ற மட்டை மில்லில் கடந்த 28.8.2019 ஆம் தேதியன்று அ.சா.3 ன் மனைவி வேலைக்கு சென்று பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு மிஷினில் மட்டையை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது மிஷினுக்குள் கை சிக்கிக் கொண்டதாக கற்பகம் என்பவர் போன் செய்து சொன்னதாகவும், பின்பு உடுமலை அரசு மருத்துவமனைக்கு மனைவியை சிகிச்சைக்கு கொண்டு வந்தார்கள் என்றும், முதலுதவி சிகிச்சை அளித்து பின்பு மேல் சிகிச்சைக்கு கோவை கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார் என்றும், இடது கையின் முழங்கைக்கு கீழே அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

9) அ.சா.4 முருகானந்தம் என்பவர் கடந்த 2018 ம் வருடம் ராகல் பாவி பிரிவு அருகில் மட்டை மில்லுக்கு மட்டை இறக்க சென்றபோது ஏட் ஐய்யா வந்து வரைபடம் வரைந்ததாகவும், அந்த இடத்தில் ஒரு அக்கா இயந்திரத்திற்குள் கை மாட்டி கொண்டதாக சொன்னதாகவும், கையெழுத்து போட சொன்னதால், தான் மட்டும் கையெழுத்து செய்ததாகவும், அதிலுள்ள விவரம் தெரியாது என்றும், பார்வை மகசரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் கூறியுள்ளார். பார்வை மகசர் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) அ.சா.5 பாலகிருஷ்ணன் என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது கடந்த 29.08.2019 ஆம் தேதி நிலைய அலுவலகத்தில் இருந்தபோது பகல் 11 மணியளவில் நிலையம் ஆஜரான ஜே.ஜே. நகரைச் சார்ந்த தங்கையா மகன் ஜெயராஜ் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண்.455/2019

சட்டப்பிரிவு 287 இ.த.ச.–வின் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை உயரதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். புலன் விசாரணை நிமித்தம் உதவியாளர் சையது இஷாக் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11) அ.சா.6 T.ரவி என்பவர் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 29.08.2019 ஆம் தேதி தலைமை காவலர் பாலகிருஷ்ணன் என்பவர் பதிவு செய்த வழக்கை, அன்றைய தினமே புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 29.08.2019 ஆம் தேதி மதியம் 13 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரகுபதி, முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும் பார்வை மகஜரும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12) பின்னர் சாட்சிகள் ஜெயராஜ், அமராவதி, கற்பகம், முருகன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணை அடிப்படையில் சம்பந்தப்பட்ட எதிரியை தேடி புலன் வைத்த போது 15.10.2019 காஷினி பூரணி சந்த் என்பவரை கைது செய்து எதிரியை இரு நபர் ஜாமினில் விடுவித்துள்ளார்.

13) பின்பு காயம்பட்ட அமராவதி என்பவருக்கு சிகிச்சை அளித்த கோவை கங்கா மருத்துவர் மாது பெரியசாமி என்பவரை விசாரித்து காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று பெற்றுள்ளார். அந்த காயச் சான்றிதழ் ஆ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் பாலகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் இறுதி

அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

14) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமானவற்றை தொகுத்து குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 313 (1) (ஆ)–வின் கீழ் எதிரியிடம் எடுத்துக்கூறி வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய்யானவைகள் என மறுத்துரைத்தார். மேலும் தான் நிரபராதி எனவும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு எனவும் கூறினார். எனினும், எதிரி தரப்பில் சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்தவில்லை.

15) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றுகள் மற்றும் ஆவணச்சான்றுகள் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டுமென்றும் வாதிட்டார்.

16) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது வாதியானவர் கவனக்குறைவாக வளையல் போட்டு மிசினில் மட்டையை விட அதிக நீளமாக கையை உள்ளே விட்டதால் தான் கை மாட்டிக் கொண்டது எனறும், வாதிக்கு கொடுக்காத வேலையை செய்துவிட்டு கவனக்குறைவாக பேசி கொண்டு மிசினில் கை விட்டுள்ளார் என்றும், அதனால் தான் நடந்தது என்றும், வாதியை எந்த வேலைக்கு எடுத்தார்களோ அந்த வேலையை மட்டும் செய்யாமல மிசினை ஆபரேட் செய்து விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றும், மேற்படி பட்டியல் சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் உறவினர்கள் என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி காயம்பட்ட நபருக்கு மிசினை இயக்குவதற்னகான பணியை வழங்கவில்லை என்றும், அவராகவே மேற்படி பணியை செய்து யாரும் இல்லாத நேரத்தில் தன்னிச்சையாக செய்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும், வழக்கு விபத்தில் காயம்பட்டவருக்கு நஷ்ட ஈடு பெற வேண்டி போடப்பட்ட பொய்யான வழக்கை புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே ஒருபோதும் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டு முடித்தார்.

<u>பிரச்சனையும் தீர்வும்</u>

17) இவ்வழக்கில் எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 287–வின் கீழான குற்றத்தினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்க வேண்டியது இந்நீதிமன்றத்தின் கடமையாகும்.

18) இவ்வழக்கு சம்பவ தேதி, நேரம் மற்றும் இடத்தை பொறுத்து பரிசீலிக்கையில் அ.சா.ஆ.1 ஆன புகாரினைப் பரிசீலிக்கையில் தனது சகோதரி அமராவதி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விஹாசினி காயர்ஸ் பதிவு எண். TN 28A 0062391–ல் மட்டை வேலைக்கு சென்றதாகவும், கடந்த 28.08.2019 ஆம் தேதியன்று காலை சுமார் 11.00 மணிக்கு மேற்படி கம்பெனியில் இருந்து ஒருவர் போன் மூலம் மட்டை மில்லில் மேற்படி அமராவதியின் இடது கை மிஷினில் சிக்கி கடுமையாக காயம் ஏற்பட்டது என்று கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

18) இந்நிலையில் அ.சா.1 அவரது முதன்மை சாட்சியத்தில் கடந்த 28.8.2019 ம் தேதி ஆண்டிப்பட்டியில் வேலையில் இருந்தபோது தனது தங்கை அமராவதி உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் விகாசினி காயர்ஸ் மட்டை மில்லுக்கு வேலைக்கு சென்றபோது அன்று காலை 11.00 மணிக்கு வேலை செய்யும் கற்பகம் என்பவர் தனக்கு போன் செய்து மட்டை அறைக்கும் மிஷினில் தனது தங்கையின் கை சிக்கி இடது கை கடுமையான காயம் ஏற்பட்டதாக கூறினார் என்று தனது புகாருக்கு ஒத்துப்போகும் வகையில் சொல்லியுள்ளார்.

19) மேலும், இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 ன் சாட்சியத்தில் உடுமலை பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விகாஷ்னி காயர்ஸ்

என்ற மட்டை மில்லில் கடந்த 28.8.2019 ஆம் தேதியன்று வேலைக்கு சென்று பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு மிஷினில் மட்டையை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது இவ்வழக்கு சம்பவம் நடந்தாக சொல்லியுள்ளார். மேலும் அ.சா.2 ன் குறுக்கு விசாரணையில் வெகு நாட்கள் கழித்து சம்பவம் நடந்த தேதியன்று அன்று தான் முதல் நாள் வேலைக்கு சென்றீர்கள் என்றால் ஒரு வாரம் லீவ் எடுத்துவிட்டு அன்று தான் போனேன் என்று கூறியுள்ளார்.

20) மேலும் கேள்விநிலை சாட்சியான அ.சா.3 ஆனவர் தனது சாட்சியத்தில் உடுமலை பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விகாஷ்னி காயர்ஸ் என்ற மட்டை மில்லில் கடந்த 28.8.2019 ஆம் தேதியன்று அ.சா.3 ன் மனைவி வேலைக்கு சென்று பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு மிஷினில் மட்டையை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது இவ்வழக்குச் சம்பவம் நடைபெற்றதாக கற்பகம் என்பவர் தகவல் சொன்னதாக சொல்லியுள்ளார்.

21) மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களிடம் எதிரி தரப்பில் இவ்வழக்கின் சம்பவ தேதி, நேரம், இடத்தை பொறுத்து மறுத்து குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

22) மேலும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 ன் முதல் விசாரணையில் கடந்த 29.08.2019 ஆம் தேதி நிலைய அலுவலகத்தில் இருந்தபோது பகல் 11 மணியளவில் நிலையம் ஆஜரான ஜே.ஜே. நகரைச் சார்ந்த தங்கையா மகன் ஜெயராஜ் என்பவர் கொடுத்த அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண்.455/2019 சட்டப்பிரிவு 287 இ.த.ச.–வின் கீழ் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை உயரதிகளுக்கு அனுப்பி வைத்ததாகவும், புலன் விசாரணை நிமித்தம் உதவியாளர் சையது இஷாக் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும் கூறியுள்ளார்.

23) மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 ஆனவர் கடந்த 29.08.2019 ஆம் தேதி தலைமை காவலர் பாலகிருஷ்ணன் என்பவர்

பதிவு செய்த வழக்கை, அன்றைய தினமே புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 29.08.2019 ஆம் தேதி மதியம் 13 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரகுபதி மற்றும் முருகானந்தம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.4 ஆன மாதிரி வரைபடமும், அ.சா.ஆ.5 ஆன பார்வை மகசரும் தயார் செய்துள்ளார்.

24) இந்நிலையில் பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 ன் சாட்சியத்தில் கடந்த 2018 ம் வருடம் ராகல் பாவி பிரிவு அருகில் மட்டை மில்லுக்கு மட்டை இறக்க சென்றபோது ஏட் ஐய்யா வந்து வரைபடம் வரைந்ததாகவும், அந்த இடத்தில் ஒரு அக்கா இயந்திரத்திற்குள் கை மாட்டி கொண்டதாக சொன்னதாகவும், கையெழுத்து போட சொன்னதால், தான் மட்டும் கையெழுத்து செய்ததாகவும், அதிலுள்ள விவரம் தெரியாது என்றும் சொல்லியுள்ளார். மேற்படி அ.சா.4 ஆனவர் தனது சாட்சியத்தில் மேற்படி ஆவணத்தில் உள்ள விவரம் தெரியாது என்று கூறியிருப்பினும் மேற்படி அ.சா.ஆ.5 ஆன பார்வை மகசரினைப் பரிசீலிக்கையில் மேற்படி பார்வை மகசர் சாட்சியின் கையொப்பம் இடம் பெற்றுள்ளது என்பது தெரியவருகிற நிலையில் மேற்படி சாட்சியின் முன்னிலையில் தான் மாதிரி வரைபடம், மற்றும் பார்வை மகசர் தாயர் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

25) மேலும் அ.சா.5 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பாலகிருஷ்ணன் என்பவரின் குறுக்கு விசாரணையில் புகாரானது எழுதி கொண்டு வந்தாரா அல்லது வந்து எழுதினாரா என்றால் வரும் போது கொண்டு வந்தார் என்றும், புகார் 24 மணி நேரம் காலதாமதம் என்றால் சரிதான் என்றும், அதற்காக காரணம் குறித்து புகாரில் சொல்லவில்லை என்றும், புகார் 11 மணிக்கு கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் எவ்வளவு நேரத்தில் முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டது என்றால் சுமார் ½ மணி நேரத்தில் கொடுக்கப்பட்டது என்றும் கூறியுள்ளார்.

26) மேலும் இது குறித்து அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியின்

குறுக்கு விசாரணையில் புகார் 24 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், கால தாமதத்திற்கான காரணம் புகாரிலும் முதல் தகவல் அறிக்கையின் எட்டாவது காலத்திலும் குறிப்பிடவில்லை என்றும் புகார் பதிவு செய்யப்பட்டு தனது புலன் விசாரணைக்கு எந்த தேதியில் எப்போது ஒப்படைக்கப்பட்டது என்றால் அன்றைய தினமே ஒப்படைக்கப்பட்டது, முதல் தகவல் அறிக்கையின் இறுதி காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். மேலும் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் சுமார் எத்தனை மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் 11.00 மணிக்கு என்று கூறியுள்ளார். இந்நிலையில் புகார் 24 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிற நிலையில் மேற்படி காலதாமதம் எவ்வகையில் எதிரிக்கு பாதிப்பை ஏற்படுத்தியது என்பது குறித்து எதிரி தரப்பில் விளக்கவில்லை. மேலும் எதிரி தரப்பில் விபத்து நடைபெற்றதைப் பொறுத்து மறுக்கவில்லை.

27) இந்நிலையில் இவ்வழக்கின் சம்பவ தேதி, நேரம் மற்றும் இடத்தைப் பொறுத்து அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களின் சாட்சியம் அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு ஒத்துப்போகும் வகையில் அமைந்துள்ள நிலையிலும், அதற்கு வலுவூட்டும் வகையில் அ.சா.ஆ.4 ஆன மாதிரி வரைடபம் மற்றும் அ.சா.ஆ.5 ஆன பார்வை மகசர் அமைந்துள்ளதாலும், இவ்வழக்கின் சம்பவ இடம், தேதி, நேரத்தை பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

28) இவ்வழக்கின் எதிரியின் அடையாளத்தை பொறுத்து பரிசீலிக்கையில் அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தில் விஹாசினி காயர்ஸ் மட்டைமில்லின் மேலாளர் மற்றும் உரிமையாளர் சுகந்த் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

29) இந்நிலையில் கேள்விநிலை சாட்சிகளான அ.சா.1ன் முதன்மை சாட்சியத்தில் உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் விகாசினி காயர்ஸ் மட்டை

மில்லின் உரிமையாளர் என்றும், அ.சா.2 ஆன பாதிக்கப்பட்ட சாட்சியின் முதல் விசாரணையில் உடுமலை பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விகாஷ்னி காயர்ஸ் என்ற மட்டை மில்லின் உரிமையாளர் வேலை செய்வதற்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு எதுவும் செய்யவில்லை என்றும், மேலும் அ.சா.3ன் முதல் விசாரணையில் உடுமலை பொள்ளாச்சி ரோட்டில் உள்ள விகாஷ்னி காயர்ஸ் என்ற மட்டை மில்லில் வேலை செய்து கொண்டிருந்தபோது இவ்விபத்து ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார்கள்.

30) மேலும், மேலும் இவ்வழக்கின் அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியும் இவ்வழக்கின் எதிரியை எதிரியை தேடி புலன் வைத்த போது 15.10.2019 காஷினி பூரணி சந்த் என்பவரை கைது செய்து எதிரியை இரு நபர் ஜாமினில் விடுவித்துள்ளார். மேலும், அ.சா.2ன் குறுக்கு விசாரணையில் " எதிரியானவர் உங்கள் மீதுள்ள கவனத்தால் அவர் தனியார் மருத்துவமனையில் கொண்டு சென்று சிகிச்சை செய்தார் " என்று அபிப்ராய கேள்விகள் கேட்கப்பட்டுள்ளதன் மூலம் எதிரி தரப்பில், எதிரியின் அடையாளத்தை மறுப்பதாக தெரியவரவில்லை. ஆகையினால் அரசு தரப்பானது எதிரியின் அடையாளத்தை பொறுத்து சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

31) இவ்வழக்கில் இவ்வழக்கு விபத்தினால் அமராவதி என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதா என்பதை பொறுத்து பரிசீலக்கையில் அ.சா.ஆ1 ஆன புகாரில் மேற்படி தேதியில் மேற்படி கம்பெணியில் வேலை செய்யும் ஒரு நபர் எனக்கு போன் செய்து மேற்படி அமராவதியின் இடது கை மிஷினில் சிக்கி கடுமையாக காயம்பட்டதாக கூறியதாகவும், உடனே உடுமலை அரசு மருத்துவமனை வந்து பார்த்தபோது, தனது தங்கைக்கு இடது கை முட்டிக்கு கீழ் முழுவதும் சேதமாகி இருந்தது என்றும், உடுமலை அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று தற்போது கோவை கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றும்

குறிப்பிடப்பட்டுள்ளது.

32) மேலும், அ.சா.1 அவரது முதன்மை சாட்சியத்தில் மேற்படி விபத்தில் மட்டை அறைக்கும் மிஷினில் தனது தங்கையின் கை சிக்கி இடது கை கடுமையான காயம் ஏற்பட்டது என்று சொன்னதன் பேரில் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு முடியாது என்று சொன்னதால் கோவை கங்கா மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், மேற்படி தனது தங்கைக்கு இடது கை முழுவதும் அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிட்டதாகவும் சொல்லியுள்ளார்.

33) மேலும், பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 ன் சாட்சியத்தில், மிஷினுக்குள் கை சிக்கிக்கொண்டதால் அய்யோ, அம்மா என்று கத்தியதாகவும், பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து மிஷினை நிறுத்திவிட்டு கையை வெளியே எடுத்துவிட்டதாகவும், கையை வெளியே எடுத்த உடன் மயக்கமாகி விட்டதாகவும், உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்ததாகவும், பின்பு மேல் சிகிச்சைக்கு கோவை கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாகவும், மேற்படி சிகிச்சையின் போது தனது பகுதி இடது கையை அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிட்டதாகவும் கூறியுள்ளார். மேலும் அ.சா.3 ன் குறுக்கு விசாரணையில் மேற்படி விபத்து ஏற்பட்ட உடன உடுமலை அரசு மருத்துவமனையில் முடியாது என்று சொல்லிய உடன் கோவை தனியார் மருத்துவமனையில் கம்பெனிகாரர் தான் சேர்த்து மருத்துவ செலவு பார்த்து வந்தார என்றால் சரிதான் என்று கூறியுள்ளார்.

34) மேலும், கங்கா மருத்துவமனையில் அளித்த அ.சா.ஆ.6 ஆன அமராவதி என்பவரின் காயச்சான்றிதழில் " 1) Crush injury left forearm with amputation at the level of middle third of left forearm " என்று குறிப்பிட்டுள்ளதன் மூலம் அமராவதி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது தெரியவருகிறது. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை எதிரி தரப்பில் மேற்படி சங்கதி குறித்து மறுத்து குறுக்கு விசாரணை

செய்யப்படவில்லை. ஆகையினால், மேற்கண்ட சாட்சிய சான்றவாணங்களை பரிசீலிக்கையில் அ.சா.2 ஆன அமராவதி என்பவருக்கு இவ்வழக்கு விபத்தினால் தான் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பதை பொறுத்து அரசு தரப்பானது நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

35) இவ்வழக்கு விபத்தானது எதிரி தனது மில்லில் வேலை செய்பவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் ஏதும் செய்யாமல் இருந்தாரா என்பதை அரசு தரப்பு நிரூபித்துவிட்டதா என சாட்சிய சான்றாவணங்களை பரிசீலிக்கையில் அ.சா.ஆ.1 ஆன புகாரில் மேற்படி தேதியில் அமராவதி தனது தங்கைக்கு மேற்படி விபத்தில் இடது கை முட்டிக்கு கீழ் முழுவதும் சேதமாகி இருந்தது என்றும், அந்த மில்லில் வேலை செய்பவர்களை விசாரித்தபோது மேற்படி மட்டைமில்லில் வேலை செய்யும் நபர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யாமல் கவனக்குறைவாகன முறையில் பணியாளர்களை பணியமர்த்தி எனது சகோதரி அமராவதியிடம் பாதுகாப்பற்ற இயந்திரத்தில் வேலை செய்யும்படி மேலாளரும், உரிமையாளரும் பணித்தபடியால மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி நபரின் கவனக்குறைவால் தான் இவ்விபத்து ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளது.

36) இந்நிலையில் எதிரி தரப்பில் விவசாய பயன்பாட்டிற்கு கொண்டு வரும் மிசினில் கீழே On, Off பட்டன் இருக்கும் என்றும், அது தெரியாமல் வாதியானவர் பார்க்காமல் விபத்து ஏற்படுத்திக் கொண்டார் என்றும் முன்மொழியப்படடுள்ள நிலையில் கேள்விநிலை சாட்சிகளான அ.சா.1 தனது முதன்மை சாட்சியத்தில் மேற்படி விபத்து ஏற்பட்டபோது மிஷினை நிறுத்துவதற்கான சுவிட் தூரமாக இருந்ததால் வேறு ஒரு நபர் சென்று Stop பட்டனை நிறுத்தும் வரை மேற்படி மிஷினில் தங்கை கை சேதாரம் ஏற்பட்டது என்றும், கூறியுள்ளார். மேலும் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் விவசாய பயன்பாட்டிற்கு கொண்டு வரும் மிசினில் கீழே On, Off பட்டன் இருக்கும் என்றும், அது தெரியாமல் உங்கள் தங்கை பார்க்காமல் விபத்து ஏற்படுத்திக் கொண்டார் என்றால் ஆனால் அந்த

மிசினில் இல்லை, துூரத்தில் On, Off பட்டன் இருந்ததால் பட்டன்கள் தெரியவில்லை, அதனால் கை மாட்டிக் கொண்டு கட்டாகி விட்டது என்றும் கூறியுள்ளார். எனினும் பாதிக்க்ப்பட்ட நபரான அ.சா2 ஆனவர் மிசினில் ஆன் ஆப் பட்டன் இடது  புறம் இருந்ததைப் பொறுத்து ஒப்புக் கொண்டுள்ளார். மற்றொரு கேள்விநிலை அ.சா.3 ஆனவர் மேற்படி மிசினில் On, Off பட்டன் எங்கு இருந்தது குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

37) இதனைப் பொறுத்து பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 அமராவதி என்பவரின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில் அவர் தனது முதல் விசாரணையில் மேற்படி விபத்திற்கான காரணம் மிஷினில் கை வைத்ததும் அதை நிறுத்துவதற்கு பக்கத்தில் சுவிட் இல்லாததால் மிஷினை நிறுத்த முடியவில்லை என்றும் எனவே மேற்படி மில்லின் உரிமையாளர் வேலை செய்வதற்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு எதுவும் செய்யவில்லை, அதனால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் சொல்லியுள்ள நிலையில் அவரது குறுக்கு விசாரணையில் மேற்படி மிசினின் அருகில் தான் On, Off பட்டன் இருக்கும் என்றாலும் அந்த பதட்டத்தில் பட்டன்களை நிறத்தவில்லை என்றாலும் என் இடது கை மிசினில் மாட்டிக் கொண்டது, பட்டன் இடது புறம் உள்ளதால் வலது கையை கொண்டு ஆப் செய்ய எட்டவில்லை என்றும், அதனால் அவர் மாமா வந்து பட்டன் ஆப் செய்தார் என்று தனது முதல் விசாரணைக்கு முரண்பட்டு கூறியுள்ளார்.

38) இந்நிலையில் அ.சா.2 ஆனவர் தனது முதல் விசாரணையில் On, Off பட்டன் துூரத்தில் இருந்ததால் தான் இவ்விபத்து ஏற்பட்டது என்று கூறிவிட்டு அவரது குறுக்கு விசாரணையில் தனது இடது கை மிசினில் மாட்டிக் கொண்டது, பட்டன் இடது புறம் உள்ளதால் வலது கையை கொண்டு ஆப் செய்ய எட்டவில்லை என்று ஒரே விசயத்தைப் பொறுத்து இரு வேறு முரண்பட்ட சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிற நிலையில், அவற்றில் எதிரிகளுக்கு சாதகமாக உள்ள கூற்றை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்ள வேண்டும் என்ற

உச்ச நீதிமன்ற

> "T.Subramanian Vs State of Tamilnadu reported in 2006(1) SCC 401 என்ற வழக்கில்
>
> If two views are reasonable possible on the very same evidence, it cannot be said that the prosecution has proved the case beyond reasonable doubt and if one point to guilty of the accused and another to this innocence, that view which is in favour of accused should be adopted"

என்று சுட்டிக்காட்டியுள்ள முன் தீர்ப்பின் சட்ட விளக்கத்தினையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. எனவே இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு நிரூபிக்கும் வகையில் போதுமானதாக அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

39) மேலும் கேள்விநிலை சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆனவர்கள் தங்களது முதல் விசாரணையில் மேற்படி விபத்து சம்பவம் குறித்து மேற்படி மட்டை மில்லில் வேலை செய்யும் கற்பகம் என்பவர் தகவல் கூறியதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி பட்டியல் சாட்சி-4 ஆன கற்பகம் என்பவரை அரசு தரப்பில் விசாரணைக்கு உட்படுத்தவில்லை. எனினும் மேற்படி பட்டியல் சாட்சி-4 ஆனவரும் கேள்விநிலை சாட்சி என்பது தெரியவருகிறது.

40) மேலும் அ.சா.1ன் முதல் விசாரணையில் மேற்படி விபத்து குறித்து கற்பகம் என்பவர் தகவல் சொன்ன பிறகு உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு முடியாது என்று சொன்னதால் கோவை கங்கா மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாக சொல்லியுள்ள நிலையில் அவரது குறுக்கு விசாரணையில் உமது தங்கைக்கு மிசினை பயன்படுத்தும் வேலை கொடுக்கவில்லை என்றால் இல்லை, மிசினில் அரைக்கும் வேலையும் செய்வார் என்றும், மட்டை அரைக்கும் வேலையை நேரில் பார்த்துள்ளீர்களா என்றால் அன்றைய தினம் பார்த்தேன் என்றும் கூறியுள்ளார். இந்நிலையில் மேற்படி சம்பவம் கேள்விப்பட்டு உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றாக முதல் விசாரணையில் சொல்லிவிட்டு தனது

குறுக்கு விசாரணையில் மட்டை அறைக்கும் வேலையை அன்றைய தினம பார்த்ததாக முரண்பட்டு கூறியுள்ளார்.

41) மேலும் பாதிக்கப்பட்ட சாட்சி அ.சா.2ன் முதல் விசாரணையில் மிஷினுக்குள் கை சிக்கிக் கொண்டதால் அய்யோ அம்மா என்று கத்தியதாகவும், பக்கத்தில் இருந்தவர்கள் ஓடிவந்து மிஷினை நிறுத்திவிட்டு என் கையை வெளியே எடுத்ததாகவும் கூறியுள்ள நிலையில் அவரது குறுக்கு விசாரணையில் தனது இடது கை மிஷினில் மாட்டிக் கொண்டது, பட்டன் இடது புறம் உள்ளதால் வலது கையை கொண்டு ஆப் செய்ய எட்டவில்லை, அதனால் அவர் மாமா வந்து பட்டன் ஆப் செய்தர் என்று கூறியுள்ளார். இந்நிலையில் மேற்படி சமயத்தில் மிஷினின் பட்டனை ஆப் செய்த அவர் மாமா என்று குறிப்பிட்ட நபரையும், அங்கு பக்கத்தில் இருந்தவர்கள் வந்து கையை எடுத்துவிட்டவர்களையோ இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்பது தெரியவருகிறது. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

42) மேலும் எதிரி தரப்பில் மட்டையை அறைக்கும் மிஷின் பற்றி கேள்விகள் கேட்கப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2ன் குறுக்கு விசாரணையில் அந்த மிஷினில் இரண்டு பல் சக்கரத்திற்கு இடையில் மட்டை கொடுத்தால் மெதுவாக சுற்றும் அமைப்பில் அரைக்கும் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான் என்றும், மிசின் வேகமாக சுற்றும், மட்டையை கவனமாக மிசினில் கொடுத்திருந்தால் கை உள்ளே மாட்டாது என்றால் கவனமாக செய்தேன், ஆனால் மட்டையை உள்ளே கொடுக்கும் போது மிசினில் கை மாட்டிக் கெண்டது என்றும் கூறியுள்ளார். அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் மேறபடி மிசினில் வேலை செய்யும் போது கவனக்குறைவாக மட்டையை கொடுக்கும் போது கை தவறுதலாக மாட்டும் என்றால் அது மட்டும் காரணம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

43) இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய மேற்படி மிசினின் புகைப்படம் தாக்கல் செய்யப்படாத நிலையில் இது குறித்து புலன் விசாரணை அதிகாரியான

அ.சா.6 ன் குறுக்கு விசாரணையில் மேற்படி மெஷின் எந்த திசையில் இருந்து என்பது பற்றியும், மெஷின் பற்றியும் குறிப்பிடவில்லை என்றும், மேற்படி மிஷினின் பற்களின் இடைவெளிகள் குறித்து உங்களது குற்ற அறிக்கையில் இல்லை என்றால் சரிதான் என்றும், நீங்கள் மெஷின் ஓடும் நிலையில் இருந்ததா என்பது பற்றி உங்களது அறிக்கையில் இல்லை என்றால் சரிதான் என்றும் கூறியுள்ள நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியானவர் மேற்படி சம்பவ இடத்தில் உள்ள மெஷின் குறித்த விவரங்களை அவரால் அறுதியிட்டு சொல்ல முடியாத நிலையில் மேற்படி சம்பவ இடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்றார் என்பதை தெளிவுபடுத்தும் வகையில் அவரது சாட்சியம் அமையவில்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

44) மேலும் புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் காயம் பட்ட நபர் மெஷினை இயக்குவதற்கு எதிரி தான் நியமித்தார் என்பது குறித்து உங்களது அறிக்கையில் இல்லை என்றால் கண்ணுற்ற சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்று கூறியுள்ள நிலையில் காயம்பட்ட நபரை தவிற இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் விசாரணைக்கு உட்படுத்தவில்லை.

45) எனவே, இவ்வழக்கில் மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலிக்கையில் இவ்வழக்கில் சம்பவ தேதி, நேரம், சம்பவ இடத்தை பொறுத்து நிரூபித்திருப்பினும், அ.சா.1, அ.சா.3 ஆனவர்கள் விபத்தை கேள்விப்பட்டதைக் குறித்து சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், அ.சா.2 ஆனவரின் சாட்சியத்தில் கண்டுள்ள முரண்பாடுகளைக் கருத்திற்கொண்டும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்தாத சூழ்நிலையிலும், எதிரியின் மீது சுமத்தப்பட்டு குற்றச்செயலை நிரூபிக்க போதிய சாட்சியங்கள் அமையாத சூழ்நிலையைக் கருத்திற்கொண்டும், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அரசு தரப்பு

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

46) முடிவாக இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டான இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 287–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

47) இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதனால் அது பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. இவ்வழக்கானது மேல் முறையீடு செய்யும்பட்சம் மாண்புமிகு மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க செயல்பட உத்திரவிடப்படுகிறது.

**Particulars under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| S. No | Description of the accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Cr.No | Name of the Police Station | Name | Father Name | Occupation | Residency | Age |
| | 455/2019 | Udumalpet | Suganthakumar | Nanthakumar | Manager | 4/55, Parthsarathi Salai, Nanmangalam, Old Pallavaram, Kanjipuram Dt. | 35/2019 |

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension | Release on Bail | Commitment | Commencement of Trial | Close of Trial | Sentence or Order | Service of copy of Judgment on accused | Explanation of Delay |
| 28.08.2019 | 29.08.2019 | 15.10.2019 | Bailed by Police on 15.10.2019 | Not applicable | 11.05.2023 | 09.03.2026 | 18.03.2026 | Nil | No Delay |

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.18 17:59:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

**இணைப்பு :–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 11.05.2023 | ஜெயராஜ் (புகார்தாரர்/கேள்விநிலை சாட்சி) |
| அ.சா.2 | 11.05.2023 | அமராவதி (பாதிக்கப்பட்ட சாட்சி) |
| அ.சா.3 | 11.05.2023 | முருகன் (கேள்விநிலை சாட்சி) |
| அ.சா.4 | 18.02.2025 | முருகானந்தம் (பார்வை மகசர் சாட்சி ) |
| அ.சா.5 | 10.03.2025 | பாலகிருஷ்ணன் (தலைமைக் காவலர்) |
| அ.சா.6 | 12.02.2026 | ரவி (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 1. | அ.சா.1 | புகார் |
| அ.சா.ஆ 2. | அ.சா.4 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ 3. | அ.சா.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ 4. | அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5. | அ.சா.6 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6. | அ.சா.6 | அமராவதி என்பவரின் காயச்சான்றிதழ் |

**எதிரி தரப்பு சாட்சிகள் :– இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணம் :– இல்லை**

**அரசு தரப்பு சான்று பொருள்கள்:– இல்லை**

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணைக்காலத்தில் பிணையிலிருந்துள்ளார்.

2. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி

வைக்கப்படவில்லை

3. தீர்ப்பு குறித்து காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.18 17:59:45 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.